"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2011-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9-ம் நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 12.15 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**திருக்குறள் :** ***"அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல் "***

**பொருள் :** தன் உயிர்போல் மன்னுயிரையும் போற்றி எல்லா உயிர்களிடத்தும் அருள் செய்வார்க்குத் தன் உயிர் அஞ்சவரும் தீய வினைகள் உண்டாகா.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

**உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன், தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு. எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று. இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன், இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்,245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) ம.தி.1/19393/99**

மதுரை மாநகராட்சி எல்கை விரிவாக்கத்தில் **100** வார்டுகளாக வார்டு எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்ட அரசாணை(நிலை) எண்.123 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் (தேர்தல்)துறை நாள் **7.9.2011** ந் தேதிய அரசு ஆணை வாசிக்கப்பட்டு,

மதுரை மாநகராட்சி ஏற்கனவே, 1.5.71 முதல் 72 வார்டுகளாக செயல்பட்டு இருந்து வந்ததை அரசாணை எண்.10. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை நாள் 6.1.2011 மூலம் மாநகராட்சியை ஒட்டியிருந்த 3 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் 11 கிராம பஞ்சாயத்துகள் ஆகியவைகளை இணைத்து வார்டுகளின் எண்ணிக்கை 72–ல்லிருந்து 100 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்த **100** வார்டுகளுக்கான எல்லைகள் நிர்ணயம் செய்து அரசாணை (நிலை) எண்.123, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் (தேர்தல்)துறை நாள் 7.9.2011 மூலம் ஆணை வெளியிட்டுள்ளது.

விரிவுபடுத்தப்பட்ட மதுரை மாநகராட்சியின் எல்கைகள் 100 வார்டுகளாக நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை(நிலை) எண். **123** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் (தேர்தல்)துறை நாள் **7.9.2011** ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.55**

**பதிவு செய்யப்பட்டது**

**2) EW 1/28881/2011**

எல்லை விரிவாக்கத்திற்கு பின் மதுரை மாநகராட்சிப் பகுதிகளுக்குட்பட்ட 100 வார்டுகளுக்கான உள்ளாட்சித் தேர்தல்–2011 நடத்துவதற்கு வரைவு வாக்குச்சாவடிப் பட்டியல்கள் மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

(வரைவு வாக்குச்சாவடி பட்டியல்கள் கோப்பில் வைக்கப்பட்டுள்ளது.)

**மாமன்றத்தீர்மானம் எண்.56**

**பதிவு செய்யப்பட்டது**

**3) ம.தி.1/19393/99**

மதுரை மாநகராட்சியில் உத்தேசிக்கப்பட்ட வார்டுகுழுக்கள் அமைப்பது தொடர்பாக பெறப்பட்ட நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் (மற்றும்) மதுரை வார்டு மறுசீரமைப்புக்கான சிறப்பு பணி அலுவலர் அவர்களின் 7.9.2011–ந் தேதிய சிறப்பு I/இ.அ.ந.நி./2011 எண்ணிட்ட கடிதம் வாசிக்கப்பட்டு,

நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் (மற்றும்) மதுரை வார்டு மறுசீரமைப்புக்கான சிறப்பு பணி அலுவலர்அவர்களின் 7.9.2011–ந் தேதிய கடிதம் எண். சிறப்பு I / இ.அ.ந.நி. / 2011–ல் மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு 5-A ன்படி மதுரை மாநகராட்சி வார்டுகுழுக்கள் அமைத்திட ஏதுவாக நான்கு வார்டுகுழுக்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வார்டு குழு எண் – **1**: வார்டு 1 முதல் 23 முடிய,
(மேற்கு)
வார்டு குழு எண் – **2**: வார்டு 24 முதல் 49 முடிய,
(வடக்கு)
வார்டு குழு எண் – **3**: வார்டு 50 முதல் 74 முடிய மற்றும்
(கிழக்கு)
வார்டு குழு எண் – **4**: வார்டு 75 முதல் 100 முடிய.
(தெற்கு)

மேற்கண்டவாறு உத்தேசிக்கப்பட்டுள்ள வார்டுகுழுக்களின் வரையரைகள் விபரங்கள் மீது மாமன்றத்தின் கருத்துக்களை பெற கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

உத்தேசிக்கப்பட்டுள்ள வார்டு குழுக்களின் வரையரைகள் விபரங்கள் குறித்து மாமன்றத்தின் கருத்துக்களை தெரிவிக்க மாமன்றத்தின் முன் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.57**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்...)ஜி.தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 09.09.2011**